**தலைப்பு 279 – கேகாலை மாவட்ட செயலகம்**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 279 - கேகாலை மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 நிதியல்லாத சொத்துக்கள் மீதிகளில் 2021 ஆம் ஆண்டில் இறுதி மீதிகள் மற்றும் 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப மீதிகளுக்கு இடையே ரூபா 1,674,053 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | பிரதேச செயலகங்களில் இருந்து தகவல்கள் பெற்றுக்கொண்டு இவ்வேறுபாடுகளை சீராக்கம் செய்வேன். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமில்லாத ரூபா 270,000 பெறுமதியான 10 மின்பிறப்பாக்கிகளும் உடைத்து அகற்றப்பட்ட ரூபா 6,945,000 ஆன பழைய கட்டிடமொன்றின் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் இருந்த அகற்றப்பட்டிருக்கவில்லை. | சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | ருவன்வல்ல பிரதேச செயலகத்தில் காணப்பட்ட 04 நிலையான சொத்துக்கள் மீதிகளின் பெறுமதி ரூபா 1,000,705 கூடுதலாக நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது | அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிவித்து சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதி கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஈ) | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 33 கட்டிடங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. அதில் 04 கட்டிடங்களின் கிரயம் ரூபா 6,852,766 ஆக இருந்ததுடன் 29 கட்டிடங்களின் கிரயம் அல்லது மதிப்பீட்டு பெறுமதி நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை அத்துடன் 11 கட்டிடங்களின் மதிப்பீட்டு பெறுமதியை விட ரூபா 352,939,402 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | அரசின் மதிப்பீடு கிடைத்த பின்னர் கணக்கீடு செய்யப்படும் | நிதி கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ரம்புக்கன பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 2,995,042 ஆன 05 சேவை இல்லங்கள் மற்றும் கேகாலை மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான ரூபா 26,700,000 ஆன 03 வாகனங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | இச்சொத்துக்கள் சொத்துக்களை கணக்கீடு செய்யுமாறு குறித்த உத்தியோர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன | நிதி கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஊ) | கலிகமுவ பிரதேச செயலகத்தின் காணியொன்று 1998 ஆம் ஆண்டின் போது இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் ரூபா 62,400,000 ஆன அக்காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி நிதி கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீண்டும் கையேற்பதற்காக வர்த்தமானி பத்திரிகையை திருத்தம் செய்வதற்கு இதுவரை முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |
| (எ) | கட்டுநிதி கணக்கு தொடர்பான கூற்றின் பிரகாரம் ஆண்டின் கட்டுநிதி பெறுவனவை விட ரூபா 274,753,336 கூடுதலாக அப் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது | ஏற்று கொள்கிறேன் சீராக்கப்பட்ட கட்டுநதி கணக்கு கூற்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளத. | நிதி கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் |

### 1.6.2 கணக்காய்விற்கு சான்றுகளின்மை

ரம்புக்கன பிரதேச செயலகத்தின் கணக்குகுளில் காண்பிக்கப்பட்டிருந்த 28,432,000 ஆன கட்டிடம் ஒன்றை உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் இல்லாமல் இருந்ததுடன் 27,340,000 ஆன காணிக்காக திட்ட வரைபடம் தவிர உரித்தை உறுதிப்படுத்துவதற்கு உறுதி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 போதியளவில் நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வறுமையை ஒழிப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்த கிராம சக்தி மக்கள் வியாபாரத்தின் கேகாலை மாவட்டத்தில் தவிர்க்கப்பட்டிருந்த 130 கிராம சக்தி சங்கங்களில் 115 சங்கங்கள் அதாவது 2022 திசெம்பர் 31 ஆம் தேதி வரையில் செயற்பாடற்று காணப்பட்டன கிராம சக்தி தாய் சங்கங்களின் கணக்குகள் மற்றும் நுண் நிதி நிகழ்ச்சி திட்டங்களின் கீழ் வரும் கணக்குகளில் 2022 | சங்க கணக்குகளில் காணப்படும் பணத்தை செலவு செய்து ஆக்கப்பூர்வமான சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் நடைமுறை ரீதியாக செயல்படுத்தும் போது சிக்கல்கள் பலவற்றுக்கு முகங் கொடுக்க நேர்ந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது | சரியாக திட்டமிட்டு பயன்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 57,605,311 தொகை நோக்கத்துக்கு உட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டன. | | |
| (ஆ) | கேகாலை மாவட்டத்தினுள் 2016 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட மண் சரிவு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 154 குடும்பங்களுக்கு மீள் குடியேற்றத்திற்காக ரூபா 150,505,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது எனினும் அவர்கள் ஆபத்தான வீடுகளிலே குடியிருந்தமை, கொடுப்பனவு செய்த பணத்துக்கு ஈடாகும் வகையில் வீட்டின் வேலைகளை பூர்த்தி செய்யாமை, கொள்வனவு செய்யப்பட்ட காணி மற்றும் வேலைகளை பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளை விற்பனை செய்தமை பணம் வழங்கப்பட்டிருந்த போதும் வேலைகளை ஆரம்பிக்காமை போன்ற காரணங்களின் பெயரில் மீள்குடியேற்றும் அச்செயற்திட்டத்தின் வெற்றி சர்ச்சைக்கரியதாக இருந்தது. அத்துடன் இந்த மண் சரிவு காரணமாக அக் குடும்பங்களை மீள் குடியேற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 393,161,033 தொகை 2022 திசெம்பர் 31 வரை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை நிதி ஏற்பாடு கிடைத்திருந்த போதும் ஆபத்துக்களை உடைய வீடுகளில் குடியிருந்தமை, கொடுப்பனவு செய்யப்பட்ட தொகைக்கு ஈடாகும் வகையில் வீட்டு வேலைகளை பூர்த்தி செய்யாமை பணம் வழங்கப்பட்டிருந்த போதும் வேலைகளை ஆரம்பிக்காமல் போன்ற காரணங்களின் அடிப்படையில் குறித்த கொடுப்பனவுகளை செலுத்த முடியாத நிலையில் உருவாகியுள்ளதால் கொடுப்பனவு செய்ய முடியவில்லை. | இது தொடர்பாக முறையான ஆய்வொன்று மேற்கொண்டு பொருத்தமான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | நாட்டில் காடு வளர்ப்பினை 2030 ஆம் ஆண்டு அளவில் 32 சதவீதத்தால் அதிகரிப்பதற்காக நாடு பூராவும் 75 மில்லியன் நாற்றுக்களை நடும் ''ஒவ்வொருவருக்கும் ஒரு கன்று'' நிகழ்ச்சித் திட்டம் கேகாலை மாவட்டத்தில் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை | நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுத்த முடியாதென அறிவிக்கப்பட்டிருந்தது. | இவ்வாறான நிகழ்ச்சித் திட்டத்திற்காக முன்னுரிமை வழங்கி செயற்படுத்த வேண்டும். |

**2.2 எதிர்பார்த்த நலன்களை (Outcome) பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலிகமுவ பிரதேச செயலகப் பிரிவில் கோழி வளர்ப்பு கிராமங்களை உருவாக்குவதற்காக 1476 கோழிக் குஞ்சுகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூபா 808,432 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந்நிதியத்தின் மூலம் செயற்திட்ட நோக்கங்களுக்கு எவ்வித தொடர்பொன்றும் இல்லாத ஆறு வீதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,941,108 செலவிடப்பட்டிருந்ததுடன் அது நோக்கத்துக்குட்பட்ட தேவைகளுக்காக செய்யப்பட்ட செலவில் 264 சதவீதமாக இருந்தது. | இதற்காக அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது நலனாலிகள் தமது உற்பத்தி மற்றும் விற்பனைகளை அதில் இலகுவாக மேற்கொள்ளலாம் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார் | செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக முன்னுரிமை வழங்கி திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் |

**2.3 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனைத்து பிரதேச செயலகங்களின் கீழும் நிறைவேற்றுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ரூபா 589 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமான 4204 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்ததுடன் ரூபா 30 மில்லியன் ஆன 65 செயற்திட்டங்கள் பகுதி அளவில் நிறைவேற்றப்பட்டிருந்தன | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமையின் கீழ் அடுத்த ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு முடியுமென எதிர்பார்க்கின்றேன். | ஆரம்ப தேவைப்பாடுகளுக்கு முன்னரிமை வழங்கி எதிர்காலத்தில் செயற்திட்டங்களை நிறைவேற்றப்பட வேண்டும் |

**2.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக தெஹியோவிட்ட தரணியகல வீதிக்கு அண்மித்ததாக காணியை கையேற்றல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. | | |
| (அ) 52 காணித் துண்டுகளுக்காக 2014 ஆம் ஆண்டு முதல் இதுவரை காணி கையேற்றல் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் இழப்பீட்டு பரிசோதனைகளை | மீண்டும் அளவிட்டு குறைபாடுகள் சரி செய்யப்பட்டு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி | மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்று இழப்பீட்டு பரிசோதனைகளை விரைவுபடுத்தப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பரிசோதனைகள் நடாத்தப்பட்ட 112 காணித் துண்டுகளை மதிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைக்கப்பட்டிருந்தது. | வேண்டும் |
| (ஆ) | 32 துண்டுகளுக்கரிய ரூபா 15,658,038 ஆன இழப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொள்வதற்கு 2022 ஆம் ஆண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அப்பணம் கிடைத்திருக்கவில்லை. | இழப்பீட்டுக் கொடுப்பனவு, வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அறிவிக்கப்படு வதில்லை என பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார் | செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல். வேண்டும் |
| (இ) | காணிக்காக செலுத்திய ரூபா 65,109,388 ஆன இழப்பீட்டுத் தொகைக்குரிய வட்டி தொகையை பெற்றுக் கொள்வதற்கு 2021 ஆம் ஆண்டின் போது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த 2023 சனவரி மாதம் வரை அப்பணம் கிடைத்திருக்கவில்லை. | இழப்பீட்டுக் கொடுப்பனவு, வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அறிவிக்கப் படுவதில்லை என பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார் | செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்தொடர் நடவடிக்கை எடுத்தல். வேண்டும |
| (ஈ) | இழப்பீடு மற்றும் வட்டி கொடுப்பனவு செய்து பூர்த்தி செய்யப்பட்டிருந்த 30 காணித் துண்டுகள் காணிக் கையேற்பு சட்டத்தின் 44(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எழுதுகருவிகள் பற்றாக்கறையால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து எழுதுகருவிகள் கோரப்பட்டுள்ளன. கிடைத்தவுடன் எஞ்சிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார் | சட்டத்தின் பிரகாரம் பதிலு நடவடிக்கை செய்யப்பட வேண்டும். |

**2.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் முன்னேற்றத்தை அடைந்திராத செயற்திட்டங்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | வரகாபொல பிரதேச செயலகத்தினால் தேன் உற்பத்தயை பிரபல்யப்படுத்துவதற்காக ரூபா 1,264,994 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் ரூபா 393,050 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட | 67 தேனிப் பெட்டிகளை பயன்பாட்டிற்கு எடுக்க முடிவில்லையெனவும் நலனாலிகளைப் பயிற்றுவித்து எஞ்சிய பெட்டிகளை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயற்திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் நலனாலிகளுக்கு பகிர்ந்தளித்தமை தவிர தேன் உற்பத்தியை பிரபலியப்படுத்துவதற்காக வேறு செயற்பாடு ஒன்று காணப்படவில்லை. அவ்வாறே 67 தேனிப் பெட்டிகள் உட்பட 84 பல்வேறு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட தினத்திலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் காணப்பட்டன. | பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | தரணியகல பிரதேச செயலக பிரிவில் பொல்கஸ்வத்த விளையாட்டரங்கினை அபிவிருத்தி செய்தல் 2021 யூலை மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எனினும் 2022 ஒக்தோபர் மாதம் வரையிலும் அவ்விளையாட்டு அரங்கு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் புற்கள் வளர்ந்திருந்ன. கைவிடப்பட்டிருந்தமையால் அதன் அபிவிருத்திக்காக செலவிடப்பட்ட ரூபா 1,470,100 தொகை விளைவற்ற செலவினமொன்றாக இருந்தது. | தரனியகல பிரதேச சபைக்குரியதாக இருப்பதால் சுத்திகரித்து விளையாட்டுகளுக்காக பயன்படுத்துமாறு பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது | செயற்திட்டம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அரனாயக்க பிரதேச செயலகத்தினால் வாசனைத் திரவியங்கள் உற்பத்தி கிராம செயற்திட்டத்தின் கீழ் 43 நலனாலிகளுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் அதில் 34 பேர் அந்த உற்பத்தி செயற்பாட்டினை கைவிட்டமையால் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 3,991,600 ஆன உபகரணங்களின் கிரயம் பயனற்ற செலவினமாக இருந்தது | நலனாலிகளின் உபகரணங்கள் மீளப் பெறப்பட்டு செயற்திட்டத்துடன் தொடர்புபடுவதற்கு ஆர்வமுள்ள்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பொருத்தமான நலனாலிகளை இனங்கண்டு சரியான திட்டங்களைத் தயாரித்து செயற்திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |
| (ஈ) | புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலக பிரிவில் விளையாட்டரங்கினை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 990,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் உடைத்து அகற்றப்பட்ட 80 கியுப் கருங்கற்கள் 2022 திசெம்பர் மாதம் வரை ஓராண்டு காலமாக அவ்விளையாட்டரங்கின் நடுப்பகுதியில் குவித்து வைத்திருந்தமை காரணமாக அதனை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்தது. | அக்கருங்கற்களை உடனடியாக அப்புறப்படுத்துவதாக தோட்ட அத்தியட்சகர் தெரிவித்ததாக புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார். | சொத்துக்களை பயன்படுத்தாமல் வைக்க கூடாது. |

## 2.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தரணியகல பிரதேச செயலகத்தினால் 222,671 தேயிலை கன்றுகளை கொள்வனவு செய்வதற்காக நடைபெற்ற பெறுகை குழுவின் தீர்மானம் கிடைப்பதற்கு 18 நாட்களுக்கு முன்னர் அக்கட்டளை கையளிக்கப்பட்டிருந்தது எனினும் அந்த தேயிலை கன்றுகள் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரை மற்றும் கட்டளை நிபந்தனைகளுக்கு முரணாக இருந்ததால் ரூபா 6,169,198 'ஆன கொள்வனவு விலை இது வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அத்தோடு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவில் தேயிலை பயிர்ச்செய்கை மற்றும் தொடர்பான நிபுணத்துவம் உடைய உத்தியோகத்தர் ஒருவருக்கு பதிலாக விவசாய ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார் | ஏற்றுக்கொள்கிறேன் இது தொடர்பாக அமைச்சு மட்டத்தில் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | சட்டங்கள் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | யட்டியன்தொட்டை பிரதேச செயலகத்தினால் ஆகக் குறைந்த கூறுவிலை நிராகரிக்கப்பட்டு 43 தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 422,970 ஆன நட்டமொன்று இடம் பெற்றிருந்ததுடன் அந்த கூறுவிலை நிராகரிக்கப்பட்டமைக்கான காரணங்கள் குறிப்பிடப்படவில்லை. | மாவட்ட செயலகத்தினால் MCZJ 9513 என்ற 30 தையல் இயந்திரங்களுக்கே பெறுகை தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது | ஆகக் அந்த கூறுவிலை விபரங்கள் நிராகரிக்கப்பட்டால் அதற்கு காரணங்கள் குறிப்பிட வேண்டும் |
| (ஆ) | கோழி வளர்ப்பு கிராமங்களை உருவாக்கும் செயற்திட்டத்தின் கீழ் மாவனல்ல பிரதேச செயலகத்தினால் ரூபா 4,747,300 ஆன உபகரணங்கள் மற்றும் 5848 கோழிக் குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஏதேனும் நோய் நிலைமையின் பேரில் 4458 அதாவது கொள்வனவு செய்யப்பட்ட எண்ணிக்கையில் 76 சதவீதம் இறந்திருந்தன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் கூறு விலை மதிப்பீடு செய்யப்பட்டமை தவிர | கால்நடை வைத்தியரின் பரிந்துரை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை மற்றும் மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்தின் பேரில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. Foxcy என்ற நோயினால் விலங்குகள் மரணித்திருந்ததுடன் அதற்குப் பதிலாக | பெறுகை சட்ட விதிகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எந்தவொரு வகையிலும் தொழில்நுட்ப மதிப்பீடொன்று மேற்கொள்ளாமல் இக்கொள்வனவு மேற்கொள்ளப் பட்டிருந்தமை அதற்கான காரணங்களாக இருந்தன. | அவ்வப்போது குஞ்சுகள் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டன. | |

## 2.8 சொத்துக்கள் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கலிகமுவ பிரதேச செயலகப் பிரிவில் 1,938,425 தொகையான பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 06 சேவை இல்ல நிலையங்கள் 2022 திசெம்பர் வரை பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை | நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் அவ்வேலைகளை பூர்த்தி செய்ய முடியும் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார் | நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொண்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சேவை இல்ல நிலையங்கள் மற்றும் வெவ்வேறு கைத்தொழில்களுக்காக பல்நோக்கு கட்டிடங்களின் நிர்மாணம் நிதி ஏற்பாடு கிடைக்காததன் பேரில் கைவிடப்பட்டிருந்தன இதனால் அந்த நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு வரை செலவிடப்பட்ட ரூபா 8,569,900 தொகை சிக்கனமற்ற செலவினமாக மாறி இருந்தது | இந்த அனைத்துக் கட்டிடங்களுக்காகவும் முன்னுரிமை வழங்கி நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்து அவற்றின் வேலைகளை பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொண்டு வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 3. மனித வள முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கேகாலை மாவட்டத்தின் பிரதேச செயலகங்களுக்காக 1910 பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதும் அதில் 452 பேர் 2022 திசெம்பர் 31 உள்ளவாறு விலகிச் சென்று இருந்தனர் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை அவர்களுக்கு ரூபா 1,130,448,384 படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அது மாதாந்த பயிற்சி பின்னர் PL-01 தரத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் இருந்ததுடன் அரசாங்க பண்ணைகளிலும் கைவிடப்பட்ட இடங்களிலும் விவசாய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மரக்கறிகள் மற்றும் பழவகை உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பயிற்சியை பூர்த்தி செய்ய வேண்டுமாயின் NVQ 3 பரீட்சையில் சித்தியடைய வேண்டியதுடன் 2022 முதலாவது காலாண்டு இறுதி அளவில் அப்பரீட்சை நடாத்தப்பட்டதுடன் பெறுபேறுகள் கிடைக்கும் வரை தற்காலிக அடிப்படையில் அரச நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தனர் எனினும் உங்களது அவதானிப்பின் பிரகாரம் அரச பண்ணைகளிலும் கைவிடப்பட்டுள்ள பயிரப்படாத இடங்களிலும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்துவதற்கு பலநோக்கு படையணி திணைக்களத்தினால் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை என அறிய தருகிறேன் | பல்நோக்கு உத்தியோகத்தர்களை நாட்டில் காணப்படும் பொருளாதார நிலமைகளை கருத்தில் கொண்டு பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக தொடர்புபடுத்தப்பட வேண்டும் |